சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள் :05.11.2024
வா.சா.1 – கண்ணதாசன்
O.S No.7/2023 :
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆவணம் தாக்கல் செய்கிறார்.)
வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:

1957ம் ஆண்டு ஜீலை 21ம் தேதி முருகாண்டி அம்பலம் என்னுடைய தந்தை சொக்கலிங்கத்திற்கு எழுதி வைத்த உயில் சாசனம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1. மேற்படி உயில் சாசனமானது அசல் தாக்கல் செய்யப்படாததால் ஆட்சேபணையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது. 16.09.1970 தேதியிட்ட என்னுடைய அப்பத்தா பரமாயி, கருப்பணன் அம்பலம் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல் வா.சா.ஆ-2. எனது அப்பா சொக்கலிங்கம் பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் அசல் வா.சா.ஆ.3. 16.12.2020 தேதியிட்ட 2வது பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 1375 பசலிக்குரிய அடங்கல் வா.சா.ஆ.5. எனது தந்தை சொக்கலிங்கத்தினுடைய வாரிசுதாரர் சான்றிதழ் வா.சா.ஆ.6. என் தந்தை பெயரில் உள்ள தோராய பட்டா வா.சா.ஆ.7. மேலூர், வட்டாட்சியர் அவர்களுடைய RTR No.940/88-89 வது வருட நடவடிக்கைகள் வா.சா.ஆ.8. மேலூர் வட்டாட்சியர் 14.08.1989 அன்று பிறப்பித்த உத்தரவு வா.சா.ஆ.9. என் தந்தையின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.10. சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.11. இணையவழி பட்டா மாறுதலுக்கான விண்ணப்பம் வா.சா.ஆ.12. 01.01.1975 முதல் 19.11.2022 வரை சர்வே நம்பர் 558/2 மேலூர் வடக்கு, அம்பலக்காரன்பட்டிக்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.13. எனது அப்பா சொக்கலிங்கத்தின் தாத்தா முருகாண்டி பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகம் வா.சா.ஆ.14.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Sd./M.Samundeeswari Prabha
Sub Judge,
Melur